# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 16: ஆலயத்தைச் சுத்திகரித்தல்

**யோவான் 2:13-17**

### நடந்த கதை . . .

இயேசு தேவாலய முற்றத்திற்குள் நுழைந்ததும், கூச்சலும் சந்தடியும் அவரை வேதனைப்படுத்தின. எங்கும் பலிமிருகங்கள் கூண்டுகளில் நிரம்ப அடைக்கப்பட்டிருந்தன; ஆலயத்திற்கு வந்தவர்களிடம் நல்ல விலைக்கு அவற்றை விற்பதற்காக வியாபாரிகள் பேரம்பேசிக் கொண்டிருந்தார்கள். புறாக்களின் சத்தமும், ஆடு-மாடுகளின் கத்தலும், தீவனங்களின் நாற்றமும் சேர்ந்து ஓர் அலங்கோலக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது.

அப்படிக் கூச்சலும் குழப்பமும் கேட்கப்படுவது தேவதிட்டம் அல்ல. எருசலேமில் முதல் தேவாலயத்தை சாலொமோன் கட்டிய போது, சுத்தியலின் தட்டல் சத்தம்கூட கேட்கவில்லை; தேவனுடைய வீட்டின் மேல் அவ்வளவு மரியாதை இருந்தது. கற்களும் மரப்பலகைகளும் வேறு இடத்தில் பணி தீர்த்துக்கொண்டுவரப் பட்டு, சத்தமில்லாமல் ஆலயக் கட்டடப் பணி நடந்தது. (1இராஜா 6:7).



ஆடுகளைக் கட்டும் கயிறுகளை எடுத்து, சாட்டைபோல இயேசு திரித்துக் கொண்டார். தேவகுமாரன் எக்காளம் போன்ற தொனியோடே, ‘இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்; என் பிதா வின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்.’ ‘என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்’ என்று முழங்கினார். யோவான் 2:16; மத்தேயு 21:13. மிருகங்களை அவிழ்த்துவிட்டார்; காசுக்காரர்களின் மேசைகளைக் கவிழ்த்துப் போட்டார்.

ஆண்டவரின் பிரசன்னம் அங்கிருந்ததை உணர்ந்த வியாபாரிகள், பீதியடைந்து, திரும்பிப் பார்க்காமல் ஓடினார்கள். எல்லாவற்றையும்விட தம் பரலோக பிதா எவ்வளவு அன்புள்ளவர் என்பதை மக்கள் தெளிவாக அறிந்திருக்கவேண்டுமென்று இயேசு விரும்பினார். அதனால்தான், பரிசுத்த தேவாலயத்தை ஒரு சந்தையாக மாற்றினதை அவரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

பரிசுத்தஸ்தலம் தீட்டுப்பட்டு, தேவசத்தியம் திரிக்கப்பட்டு, அவருடைய மக்கள் உபத்திரவப்படுத்தப்படும் ஒரு காலக்கட்டம் பற்றிப் பல வருடங்களுக்குமுன்பே தானியேல் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருந்தார். ஆண்டவர் தம் பரிசுத்தஸ்தலத்தைச் சுத்திகரிக்க மீண்டும் ஒருமுறை வரவிருக்கிறார்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. **இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா பற்றிய ஒரு தரிசனத்தை தானியேல் கண்டார் (தானியேல் 8:1-4). அந்த ஆட்டுக்கடா யாரைச் சுட்டிக்காட்டுகிறது?**

   **தானியேல் 8:20.** *நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா _______________ _______________ தேசங்களின் ராஜாக்கள்.*

2. **அடுத்ததாக, ஒரு வெள்ளாட்டுக் கடாவில் இரண்டு கண்களுக்கு நடுவே ஒரு பெரிய கொம்பு இருந்ததாக தானியேல் கண்டார். அதன் அர்த்தம் என்ன?**

   **தானியேல் 8:21,22.** *ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா _______________ தேசத்தின் ராஜா; அதின் கண்களுக்கு நடுவே இருந்த பெரிய கொம்பு அதின் _______________ ராஜா. அது முறிந்துபோனபின்பு அதற்குப் பதிலாக நாலு கொம்புகள் எழும்பினது என்னவென்றால், அந்த ஜாதியிலே __________ ராஜ்யங்கள் எழும்பும்.*

**குறிப்பு:** வெள்ளாட்டுக் கடாவானது கிரேக்க நாட்டையும், அதன் பெரிய கொம்பானது அந்நாட்டின் முதல் அரசனான அலெக்ஸாணடரையும் சுட்டிக்காட்டின. அலெக்ஸாண்டர் மரித்ததும், அந்தச் சாம்ராஜ்யத்தின் வெவ்வேறு பிரதேசங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த நான்கு தளபதிகளை நான்கு கொம்புகளும் சுட்டிக்காட்டின.

3. **அந்த நான்கில் ஒன்றிலிருந்து ஒரு சின்ன கொம்பு முளைத்தது; அந்தச் 'சின்ன கொம்பு' எந்த வல்லமையைச் சுட்டிக்காட்டுகிறது?**

   **அப்போஸ்தலர் 18:2.** *யூதரெல்லாரும் ____________________ விட்டுப் போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டான்.*

**குறிப்பு:** தேவனுடைய மக்களை உபத்திரவப்படுத்தி, பரிசுத்தமானவைகளை மிதித்துப் போட்டு, இயேசுவை எதிர்த்து நின்ற 'சின்ன கொம்பு' அஞ்ஞான ரோமையும் போப்புமார்க்க ரோமையும் சுட்டிக்காட்டுகிறது. கிரேசியாவைப் பின்பற்றி, மிகப்பெரியதாக உருவான ஒரே வல்லமை ரோம் தான்.

4. **சின்ன கொம்பு ஆசரிப்புக்கூடாரத்தைத் தீட்டுப்படுத்துமென்று சொல்லப் பட்டது. அது சுத்திகரிக்கப்பட எவ்வளவு காலம் ஆகும்?**

   **தானியேல் 8:14.** ____________________ _______________ *இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்.*

**குறிப்பு:** 2300 இராப்பகல்தான் வேதாகமத்தில் நீண்டகால தீர்க்கதரிசனமாகும்; அது எப்போது ஆரம்பிக்கயிருந்தது என்பது தானியேல் 9:25 ல்தான் சொல்லப்பட்டுள்ளது.

5. **சின்ன கொம்பானது தேவமக்களைத் துன்புறுத்தி, சத்தியத்தை ஒதுக்கிய தாக தானியேல் கண்டபோது என்ன செய்தார்?**

   **தானியேல் 8:27.** *தானியேலாகிய நான் சோர்வடைந்து, சிலநாள் _______________ பட்டிருந்தேன்; அந்தத் தரிசனத்தினால் திகைத்துக்கொண்டிருந்தேன்; ஒருவரும் அதை ____________________.*

**குறிப்பு:** தேவ மக்களுக்குச் சம்பவிக்கயிருந்ததை நினைத்து தானியேல் மிகவும் வேதனையடைந் தார்; அவருக்கு மயக்கம் வந்தது, சில காலம் வியாதிப்பட்டார். ஆனால், தீர்க்கதரிசனத்தில் 2300 இராப்பகல் பற்றிச் சொல்லப்பட்டவை தானியேலுக்கோ அவருடைய நண்பர்களுக்கோ முதலில் புரியவில்லை.

**6. அடுத்த அதிகாரத்தில், தீர்க்கதரிசனத்தை மிகவும் விளக்கமாகத் தீர்க்க தரிசி விவரிக்கிறார். முன்பு தீர்க்கதரிசனத்தில் சொல்லப்படாத அந்தக் காலக் கட்டத்தின் அளவு என்ன?**

**தானியேல் 9:24.** *தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், ... உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் ________________ ________________ செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.*

**குறிப்பு:** 2300 நாட்கள் பற்றி தானியேல் தரிசனம் கண்டு பல வருடங்கள் கடந்திருந்தன; அப் போது தானியேலுக்கு அந்தத் தரிசனத்தை விளக்கும்படி பரலோகத்திலிருந்து ஒரு தூதன் பறந்து வந்தான். யூதர்களுக்கும் எருசலேம் நகரத்திற்கும் 'குறிக்கப்பட்டிருந்த' அல்லது நியமிக்கப்பட்டிருந்த 70 தீர்க்கதரிசன வாரமும் அதோடு சேர்வதாக தூதன் சொன்னான். தாம் தெரிந்துகொண்ட தேசத்தினருக்கு தேவன் இன்னொரு வாய்ப்பு கொடுத்திருந்தார். அதாவது, மேசியாவை உலகத்திற்கு எடுத்துச்சொல்லும் வேலையை நிறைவேற்ற 490 வருடம் கொடுக்கப்பட்டிருந்தது. தானி 9:23,24.

**7. 2300 இராப்பகல், 70 வார தீர்க்கதரிசனத்தின் ஆரம்பம் எப்போது?**

**தானியேல் 9:25.** *இப்போது நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: ________________ திரும்ப ________________ கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்.*

**குறிப்பு:** எருசலேமை திரும்ப எடுத்துக்கட்ட பிறப்பிக்கப்படும் காலக்கட்டத்திலிருந்து 70 வார தீர்க்கதரிசனமும் 2300 இராப்பகல் தீர்க்கதரிசனமும் துவங்குவதாக தூதன் சொன்னான். அப்போது, தேவ பிள்ளைகள் பெர்சியாவில் சிறைக்கைதிகளாக இருந்தார்கள். அர்தசஷ்டா ராஜாவினுடைய ஆட்சியின் ஏழாம் வருடத்தில் அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. அ வருடைய ஆட்சி கி.மு. 464 இல் ஆரம்பித்தது. கி.மு. 457 இல் பிறந்த ஆணையில் மாத்திரம்தான் எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை காணப்படுகிறது.

**8. கி.மு. 457ம் ஆண்டிலிருந்து 69 வாரங்கள் கணக்கிட்டால், பிரபுவாகிய மேசியாவின் காலத்தோடு அது முடிவடையும் என்று தூதன் சொன்னான். அப்படி நிகழ்ந்ததா?**

**அப்போஸ்தலர் 10:37,38.** *யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்த பின்பு ... நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் ________________.*

**குறிப்பு:** ஆம் நடந்தது. இது ஓர் அற்புதம். பரிசுத்த ஆவியால் இயேசு அபிஷேகம் பண்ணப்படுவதற்கு பல நூறு வருடங்களுக்கு முன்னரே, அதுபற்றி தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளது. 'அபிஷேகம் பண்ணப்பட்டர்' என்பதற்கான எபிரெய வார்த்தைதான் 'மேசியா'; அதற்கான கிரேக்க வார்த்தை 'கிறிஸ்து'. பரிசுத்த ஆவியின் இந்த விசேஷித்த அபிஷேகம் அவருடைய ஞானஸ்நானத்தின் போது நடந்ததாக லூக்கா 3:21,22 சொல்கிறது. வேதாகமத் தீர்க்கதரிசனத்தில், ஒரு தீர்க்கதரிசன நாளானது ஒரு வருடத்திற்கு சமம். எண்ணாகம் 14:34; எசேக்கியேல் 4:6; லூக்கா 13:32. கி.மு. 457 ஆம் ஆண்டோடு 69 வாரங்களை, அதாவது 483 தீர்க்கதரிசன நாட்களைக் (69 × 7= 483) கூட்டினால், கி.பி. 27 ஆம் வருடம் வரும்.


483 வருடங்கள்<br>
\+ 457 இன் ஆரம்பநாள் (கி.மு. )<br>
கி.பி.26<br>
\+ 1 (கி.பி. 1க்கும் கி.மு. 1க்கும் இடைபட்ட வருடம் (0 வருடம் கிடையாது)<br>
கி.பி. 27

கி.மு. 457 இல் அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டுச் சரியாக 483 வருடங்களுக்குப் பிறகு அதாவது கி.பி. 27 இல் இயேசு ஞானஸ்நானம் பெற்றார்; பிறகு தம் ஊழியத்தைத் தொடங்கினார். அத னால்தான், தாம் ஞானஸ்நானம் பெற்றதும் 'காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று' என்று இயேசு பிரசங்கிக்க ஆரம்பித்தார். மாற்கு 1:15. தானி 9:25 இன் தீர்க்கதரிசன காலம்பற்றித்தான் அவர் பேசினார்.

## 9. அடுத்து என்ன நிகழும் என்று தீர்க்கதரிசனம் சொன்னது?

**தானியேல் 9:26,27.** *அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப்பின்பு மேசியா ______________________; ஆனாலும் தமக்காக அல்ல; … அவர் ஒரு வார மளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் ________ சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்.*

**குறிப்பு:** 70 வாரத் தீர்க்கதரிசனத்தினுடைய கடைசி வாரத்தின் மத்தியில் இயேசு சங்கரிக்கப்படு வார் என்று அந்தத் தீர்க்கதரிசனம் சொல்கிறது. கி.பி. 27 இன் இலையுதிர் காலக்கட்டத்தில் இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டார். அவர் மரித்தபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது. (மத்தேயு 27:50,51); தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரித்ததால், பலிமுறையை இயேசு ஒழித்துவிட்டதை அது அடையாளப்படுத்தியது. மேலுள்ள காலக்கட்டத்தை மீண்டும் ஆராயுங்கள்.




## 10. முதலில் யாருக்குப் பிரசங்கிக்கும்படி இயேசு தம் சீடர்களிடம் கூறினார்?

**மத்தேயு 10:5,6.** *நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாம(ல்) … காணாமற் போன ஆடுகளாகிய ____________________ வீட்டாரிடத்திற்குப் போங்கள்.*

**குறிப்பு:** தம்முடைய சீடர்கள் யூதர்களுக்கு முதலில் பிரசங்கிக்கவேண்டுமென்று இயேசு வற்புறுத் தினார். ஏனென்றால், மேசியாவை ஏற்றுக்கொண்டு, பிரசங்கிக்க அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட 490 வருடத்தவணை காலத்தில், இன்னொரு மூன்றரை வருடம் மீதியாயிருந்தது. இயேசு அநேகருக்குஉடன்படிக்கையை அல்லது இரட்சிப்பின் மகா திட்டத்தை ஒரு தீர்க்கதரிசன வாரம் (7 வருடங்கள்) உறுதிப்படுத்துவாரென்று தானி 9:27 ன் தீர்க்கதரிசனம் சொன்னது. ஆனால், தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்தாருக்கு ஒதுக்கப்பட்ட கடைசி வாரத்தின் மத்தியில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார்; அப்படியானால் தாம் மரித்தபிறகு அவர் எப்படி உடன்படிக்கையை உறுதிப்படுத்தமுடியும்? எபிரெயர் 2:3 இல் அதற்கான பதில் உள்ளது. 'முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப் பட்டது(மாயிருக்கிற) இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமா னால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்' எபிரெயர் 2:3. கடைசி மூன்றரை வரு டங்கள் இயேசுவின் சீடர்கள் யூதர்களுக்குப் பிரசங்கித்தார்கள்; ஆனால் சபை மூப்பனும் நீதி மானுமாகிய ஸ்தேவான் என்பவரை கி.பி. 34 இல் பொது இடத்தில் அவர்கள் கல்லெறிந்து கொன்றபிறகு அந்தக் காலக்கட்டம் முடிந்தது. ('மிதக்கும் வாரம்' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசிக்கவும்).

## 11. தாம் தெரிந்துகொண்ட மக்களுக்கு இயேசு கொடுத்த எச்சரிப்பு என்ன?

**மத்தேயு 21:43.** *ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து ____________________, அதற்கேற்ற கனிகளைத் தருகிற __________________ கொடுக்கப்படும்.*

**குறிப்பு:** யூததேசத்தினர் தொடர்ந்து மேசியாவை மறுதலித்து வந்தால், அவர்களுடைய விசேஷித்த அந்தஸ்து எடுத்துக்கொள்ளப்படுமென்று இயேசு தெளிவாகச்சொன்னார்.

## 12. மத்தேயு 21:43 இல் தாம் தெரிந்துகொள்ளப்போவதாக இயேசு சொன்ன அந்த 'வேறு' மக்கள் யார்?

**கலாத்தியர் 3:29.** *நீங்கள் ___________________________, ஆபிரகாமின் சந்ததியாரா யும், வாக்குத்தத்தத்தின்படியே ______________________ இருக்கிறீர்கள்.*

**ரோமர் 2:28,29.** *புறம்பாக யூதனானவன் யூதனல்ல, … ________________________ யூதனானவனே __________.*

**குறிப்பு:** கி.பி. 34 இல் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றபிறகு (அப் 7:58,59), தேவன் தெரிந்து கொண்ட தேசம் என்கிற அந்தஸ்தை யூததேசம் இழந்தது. அவர்கள் தேவனுடைய திட்டத்திற்கு தொடர்ந்து எதிர்த்துநின்றதால், கடைசிக்காலத் தீர்க்கதரிசனம் இஸ்ரவேல் தேசத்தை மையமாக வைத்துச் சொல்லப்படவில்லை. இப்போது இயேசுவை ஏற்றுக்கொள்ளும் அனைவருமே அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தாம்; அன்றைய இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் இன்றைய ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் பொருந்தும்.

## 13. 2300 இராப்பகலின் முடிவில் என்ன நடக்குமென்று தானியேலிடம் பேசின தூதன் கூறினான்?

**தானியேல் 8:14.** *அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு ____________________ ____________________ என்றான்.*

**குறிப்பு:** கி.பி. 34 இல், 2300 நாள் தீர்க்கதரிசனத்தில் 1810 வருடங்கள் மீதியிருந்தன. (வரைபடத்தில் வருடக்கணக்கைப் பார்க்கவும்). கி.பி. 34 உடன் 1810 வருடங்களைக் கூட்டினால் 1844 இன் இலையுதிர் காலம் வருகிறது. அப்போது பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுமென்று தூதன் சொன்னான். (கி.பி.70 இல் பூலோக ஆசரிப்புக்கூடாரம் அழிக்கப்பட்டது). பரலோகத்திலிருக்கும் நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு (எபிரெயர் 4:14–16; 8:1–5) பரலோக ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து 1844 இல் பாவப்பதிவுகளை சுத்திகரிக்கத் தொடங்கியிருக்கிறார். வெளி 20:12; அப் 3:9,21. நியாயவிசாரணையின் இந்த முதல் கட்டம் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்னர் நடைபெறுவதால், வருகைக்கு முந்தைய நியாயவிசாரணை என்றழைக்கப்படுகிறது.




## 14. வருகைக்கு முன்னர் நடக்கும் நியாயவிசாரணையில் யாருடைய வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன?

**1 பேதுரு 4:17.** *நியாயத்தீர்ப்பு ____________________ ____________________ துவக்குங்காலமாயிருக்கிறது.*

**குறிப்பு:** இந்த முதல்கட்ட விசாரணையில், தேவபிள்ளைகளெனத் தங்களைச் சொல்லிக் கொள்பவர்களின் வழக்குகள்மாத்திரமே விசாரிக்கப்படுகின்றன.

## 15. நியாயவிசாரணையின் முதல் கட்டத்தில் எதுபற்றி விசாரிக்கப்படும்?

**வெளிப்படுத்தல் 20:12.** *அந்தப் ____________________ எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.*

**பிரசங்கி 12:14.** *ஒவ்வொரு ____________________, ____________________ ஒவ்வொரு காரியத்தையும், ... தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.*

**யாக்கோபு 2:12.** ____________________ *நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடிச் செய்யுங்கள்.*

**குறிப்பு:** இந்த விசாரணைக்கான அத்தாட்சிகள், ஒரு மனிதனின் அனைத்து விபரங்களும் அடங்கிய பரலோகப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. சங் 56:8. தேவனுடைய பிரமாணமான பத்துக் கற்பனைகள்தாம் நியாயவிசாரணையின் அளவுகோலாக இருக்கும். வெளி 22:14.

## 16. நியாயவிசாரணையில் தேவன் என் மேல் குற்றஞ்சுமத்துவாரா?

**வெளிப்படுத்தல் 12:9,10.** ____________________ *என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பம் பூமியிலே விழத்தள்ளப்பட்டது ...*

*இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். வெளிப்படுத்தல் 12:10.*

**குறிப்பு:** குற்றப்படுத்தமாட்டார். குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தான் மாத்திரம்தான். நியாயத்தீர்ப்பில் நம்மைக் காப்பாற்ற பிதாவை இயேசு சமாதானப்படுத்துவதாக சில கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள்; இது தவறு. 'பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்' என்று இயேசுதாமே சொல்லியிருக்கிறார். யோவான் 16:27.

### 17. வருகைக்குமுன்னான நியாயவிசாரணையில் நான் மட்டும் தனியாக நிற்கவேண்டுமா?

**1யோவான் 2:1.** *என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற ________________ கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.*

*அ. இயேசு நம் வழக்கறிஞர். (1யோவான் 2:1).*
*ஆ. இயேசு நம் நீதிபதி. (யோவான் 5:22).*
*இ. இயேசு நம் உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி. (வெளி 3:14)*

**குறிப்பு:** இல்லை. இயேசுவுக்கு நன்றி. ஒரு கிறிஸ்தவனின் வழக்கறிஞரும், நியாயாதிபதியும், சாட்சியும் இயேசு தான். நீங்கள் இயேசுவுக்காக வாழ்ந்தால், தோற்கப்போவதே இல்லை. ரோமர் 8:1; கொலோ 1:12–14

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

நியாயவிசாரணையில் இயேசு உங்கள் வழக்கறிஞராக இருப்பதால், வழக்கில் நிச்சயம் உங்களுக்கு வெற்றியென அவர் வாக்குரைக்கிறார். இன்றே உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்படைப்பீர்களா?

## பதில்: ______________________________

### பிரிக்கப்பட்ட வாரம்

தானியேலில் சொல்லப்பட்டுள்ள 490 வருடத் தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரத்தை (அதாவது, ஏழு வருடங்கள்) சில வேத ஆராய்ச்சியாளர்கள் கணக்கில் எடுக்காமல், கடைசிக்கால அந்திக்கிறிஸ்துவின் கிரியையோடும், ஏழு வருட உபத்திரவத்தோடும் அதைச் சம்பந்தப்படுத்திப் பேசுகிறார்கள். இந்தக் கருத்துக்கு வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

### ஒரு சில உண்மைகளைப் பார்ப்போம்

அ. தேவமக்களின் 70 வருடச் சிறையிருப்புபற்றி தானி 9:2 இல் சொல்லப்பட்டுள்ளதுபோல, 490 வருடத் தீர்க்கதரிசனமும் தொடர்ச்சியான காலக்கட்டம் பற்றியதுதான்.

ஆ. தீர்க்கதரிசனத்தின் கடைசி ஏழு வருடங்கள் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது ஆரம்பித்தது. (கி.பி.27). அதனால்தான் 'காலம் நிறைவேறிற்று' என்று பிரசங்கித்தார். மாற்கு 1:15.

இ. கி.பி. 31 இன் வசந்தகாலத்தில், சிலுவையில் இயேசு மரிக்கும்போது "முடிந்தது' என்று சொன்னார். தானி 9 இல் தம்முடைய மரணம்பற்றிச் சொல்லப்பட்டுள்ளதை இரட்சகர் இங்குத் தெளிவாகச் சுட்டிக் காட்டுவது தெரிகிறது. அவை பின்வருமாறு;

❶ "மேசியா சங்கரிக்கப்படுவார்" அல்லது சிலுவையில் அறையப்படுவார். வச 26.
❷ தேவனுடைய மெய்யான ஆட்டுக்குட்டியாக அனைவருக்காகவும் மரிப்பதன்மூலம் 'பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்'. (வச 27; 1கொரி 5:7;15:3).
❸ அவர் 'அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுவார்'. வச 24.

***தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட மேசியாவாகிய அவர் ஏற்றகாலத்தில் வந்தார்.***
490 வருடத் தீர்க்கதரிசனமும், 2300 வருடத் தீர்க்கதரிசனமும் அப்படியே நிறைவேறினதை அது நிரூபிக்கிறது.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com